**ஜீலை 28**

## *புனித இன்னோசென்ட் (-417)*

இவர் 16 ஆண்டுகள் திருச்சபையை நடத்தி வந்தார். இவரது காலத்தில் மூன்று பதிதக் கொள்கைகள் பரவியிருந்தன. அவைகளுக்கு விரோதமாக அரசன் ஒரு சட்டம் இயற்ற இவர் காரணமாக இருந்தார். ரவன்னா நகரில் மேற்கு உரோமைப் பேரரசருக்கும் அலரிக் மன்னருக்கும் இடையில் சமாதானத்தை ஏற்படுத்த முயன்றார். இவரது முயற்சிகள் பெற்றி அளிக்கவில்லை. 410-ஆம் ஆண்டு அலரிக் உரோமையைப் பிடித்து அழித்தான். புனித இன்னோசென்ட் திருச்சபையில் கட்டுப்பாட்டை உறுதிப்படுத்த மிக முயன்றார். உரோமைச் திருச்சபையை எல்லோரும் பின்பற்ற வேண்டும் என்றார். உலகமெங்கும் திருச்சபைக் காரியங்களில் பாப்பானவரே தீர்ப்பளிக்க வேண்டும் எனக் கூறினார். மேற்கத்திய நாடுகளிலும் கிழக்கத்திய நாடுகளிலும் திருச்சபை செழித்தேங்க ஆர்வத்துடன் உழைத்தார்.

**சிந்தனை:**

கிறிஸ்தவர்கள் அனைவரும் பாப்பானவருக்கு நிபந்தனையின்றி அனைத்திலும் கீழ்ப்படிய வேண்டும்.

**செபம்:**

ஆண்டவரே, எதிரிகளின் கையிலிருந்து திருச்சபையைக் காப்பாற்றும்.